தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு,
மார்ச் 13, 2022

# எஞ்சியவை யாது?

கடவுளைச் சந்திக்க வேண்டுமென்றால், இவ்வுலகை வெறுத்து விட்டு வனத்துக்கு ஓட வேண்டிய அவசியம் இல்லை. இயற்கைக்குப் புறமுதுகு காட்ட வேண்டிய அவசியம் இல்லை. “அழகு என்னும் சொல்லுக்குக் கீழைத் திருச்சபைகள் சிறப்பு அம்சங்களைச் சேர்த்திருக்கின்றன. அழகைப் பற்றி உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால் கடவுள் இப்புவியோடு கொண்டுள்ள சுமூகமான உறவின் மூலமும், இவ்வுறவின் மூலம் மனிதன் மீண்டும் இறைச்சாயலாக உருமாறி இருப்பதையும், எங்கெங்குத் தேடினாலும் இந்த அழகை நம் கண்களால் பார்க்க முடிகிறது. அதோடு திருச்சபையின் பரிணாம வளர்ச்சியிலும், பாடல்களிலும். ஒலிகளிலும், வண்ணங்களிலும், ஒளி விளக்குகளிலும், வாசனைப் பொருட்களிலும் அழகைக் காண முடிகிறது.

*லாடாதோ சி #235*

*நாம் வாழும் சூழலின் அழகை நாம் எவ்வாறு புரிந்து கொள்கின்றோம் என்பதை கருத்தில் கொள்ள நேரம் ஒதுக்குங்கள்! இந்த இந்த அழகானது முற்றிலும் வெளிப்புறமானதா? அல்லது இறைவனோடு இணக்கமாக உறவு கொள்ளும் உட்புறமானதா? நாம் நமது சுற்றுச்சூழலில் உள்ள புற அழகை உணர்ந்து கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் நாம் நமது அக அழகை உணராமல் இருப்பது. நம்மை சுற்றியுள்ள விவகாரங்கள் பாவத்தில் வேரூன்றி இருக்கின்றனவா? என்ற கேள்வியை நாம் எழுப்புவது போல நாம் நம்மை சுற்றியுள்ள புற அழகு நமக்குள்ளே இருக்கும் நம் அக அழகில் வேரூன்றி இருக்கின்றதா?*

## நற்செய்தி – லூக்கா 9:28-36
## இயேசுவின் உருமாற்றம்

இவற்றையெல்லாம் சொல்லி ஏறக்குறைய எட்டு நாள்கள் ஆனபிறகு இயேசு பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைமீது ஏறினார். அவர் வேண்டிக்கொண்டிருந்தபோது அவரது முகத்தோற்றம் மாறியது; அவருடைய ஆடையும் வெண்மையாய் மின்னியது. மோசே, எலியா என்னும் இருவர் அவரோடு பேசிக் கொண்டிருந்தனர். மாட்சியுடன் தோன்றிய அவர்கள் எருசலேமில் நிறைவேறவிருந்த அவருடைய இறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேதுருவும் அவரோடு இருந்தவர்களும் தூக்கக் கலக்கமாய் இருந்தார்கள். அவர்கள் விழித்தபோது மாட்சியோடு இலங்கிய அவரையும் அவரோடு நின்ற இருவரையும் கண்டார்கள். அவ்விருவரும் அவரை விட்டுப் பிரிந்து சென்றபோது, பேதுரு இயேசுவை நோக்கி, “ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்” என்று தாம் சொல்வது இன்னதென்று தெரியாமலே சொன்னார். இவற்றை அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட்டது. அம்மேகம் அவர்களைக் சூழ்ந்தபோது அவர்கள் அஞ்சினார்கள். அந்த மேகத்திலிருந்து, “இவரே என் மைந்தர்; நான் தேர்ந்து கொண்டவர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது. அந்தக் குரல் கேட்டபொழுது இயேசு மட்டும் இருந்தார். தாங்கள்

கண்டவற்றில் எதையும் அவர்கள் அந்நாள்களில் யாருக்கும் சொல்லாமல் அமைதி காத்தார்கள்.

## சிந்தனைக்கு

Moகிறிஸ்து வருவதற்கு முன்பே மோயீசன் வாயிலாக இறைவன் கொடுத்த சட்டத்தை இஸ்ராயேல் மக்கள் ஏற்று கொண்டனர். அனைத்து தீர்க்கதரிகளையும் பிரதிநிதித்த எலியாவும், இஸ்ரயேல் மக்களுக்குத் திருச்சட்டத்தின் கட்டளைகளை நினைவுபடுத்தினார். கடவுளின் ஒரே மகனான இயேசு இவர்கள் இருவரையும் மிஞ்சியுள்ளார். இயேசுவின் உருமாற்றம் இவ்வுலகத்தில் நம்மோடு ஒருவராக இருப்பதைக் குறிக்கின்றது. இயேசு நம்முள் எப்படி கிரியை செய்கின்றார் என்பது இதன்வழி தெரிகின்றது. இயேசுவின் உருமாற்றம் நம் அனைவருக்கும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பேதுருவும் யோவானும் இயேசுவுடன் மலையில் தங்க விரும்பினர். ஆனால், அவர்களால் முடியவில்லை. இறுதியில், அவர்களுக்கு எல்லாம் மங்கலாக தெரிந்தது. அவர்களும் சோர்வுற்றுக் காணப்பட்டனர். இராயப்பரின் மரணம் ஒரு தியாகியின் மரணம் போல் இருந்தது. யோவானின் வாழ்க்கையோ மிகவும் எளிமையானதாகவும் இயற்கையாகவும் இருந்தது. அதுபோலவே, விசுவாசத்துடன் இருந்தால் மட்டுமே நம்மால் வாழ முடியும். நம்முடைய விசுவாச வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்று இறைவன் திட்டமிடுகின்றாரோ, அதுவரை நமது வாழ்க்கைப் பயணம் ஒரு யாத்திரையாகத்தான் அமையும். ஒரு பழமொழி சொல்வது போல், “நாம் யாராக இருக்க வேண்டும் என்பது கடவுள் நமக்கு அளித்த பரிசு; நாம் யாராக மாறுகிறோம் என்பது கடவுளுக்கு நாம்

கொடுக்கும் பரிசு”. எசாயா 40:8இல் கூறியிருப்பது போல ““உரக்கக் கூறு” என்றது ஒரு குரல்; “எதை நான் உரக்கக் கூற வேண்டும்?” என்றேன். “மானிடர் அனைவரும் புல்லே ஆவர்; அவர்களின் மேன்மை வயல்வெளிப் பூவே!”. இறுதியில் அனைத்தும் படிப்படியாக மங்கும் போது இயேசு மட்டுமே நமக்காக இருப்பார் என்பதை இயேசுவின் இந்த உருமாற்றம் அறிவுறுத்துகின்றது. நம்முடைய வாழ்க்கையில் அனைத்தும் ஒரு முடிவுக்கு வரும்போது, நம்மிடம் எஞ்சியிருக்கப்போவது என்ன? இயேசுவிடம் நாம் எதைக் கொடுக்கப் போகின்றோம்?

## தவக்கால முயற்சி

*லாடாதோ சி,* இறைவனின் படைப்பில் இருக்கும் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் பற்றிப் பேசியுள்ளார். நமது திருத்தந்தையும் “சுற்றுச்சூழலுக்கு உதவும் வகையில் உள்ள நமது கடமைகள், விசுவாச வாழ்வில் வேரூன்றிச் செய்யப்படுகின்றபோது அவற்றிற்குப் புதுப்பொழிவும், தெம்பும் பிறக்கின்றன. விசுவாசத்தை மையமாக வைத்துச் செய்யப்படுகின்ற செயல்பாடுகள் மாபெரும் வெற்றிகளைக் கண்டுள்ளன” என்று எழுதியுள்ளார். (லா.சி#64) சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக நமது பங்கைச் செய்ய நாம் தயாராய் இருக்கிறோமா? என நம்மை நாமே கேட்டுப் பார்ப்போம்.

## என் நிலைபாடு

- வீண் விரயத்திற்கு எதிராக நாம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக தண்ணீர் மற்றும் மின்சாரத்தை அதிக அளவில் பயன்படுத்துவதைக் குறைத்து கொள்ள வேண்டும்.

அரிசி மற்றும் காய்கறிகளை கழுவும் தண்ணீரை நமது செடிகளுக்கு ஊற்றலாம். நாம் வீட்டைவிட்டு அல்லது அறையைவிட்டு வெளியேறும் போது மின்விசிறிகளையும் குளிரூட்டியையும் அணைத்துவிட வேண்டும். முடிந்தவரை கூட்டுசவாரியை மேற்கொள்ள வேண்டும்.

- வீட்டில் மின்விசிறியைப் பொறுத்துவது நல்லது. ஒரு சில நேரங்களில் நமது வீட்டின் அமைப்புக்கு அது பொருந்தாமல் இருந்தாலும், எவ்விதமான இயற்கை பாதிப்பும் இல்லாதவாறு நாம் இருக்கும் அறையை அது குளுமைப்படுத்தும்.

*புதியவர்களுக்காக:*

- முதலில் கூட்டுச்சவாரி செய்ய முற்படுங்கள். காய்கறி அல்லது அரிசி கழுவிய நீரைப் தாவரங்களுக்குப் பாய்ச்சுங்கள். அறையைவிட்டு வெளியேறும் பொழுது, மின்விசிறியின் விசையை அணைக்கவும். ஓர் அறையில் இருந்து வெளியேறும் போது, குளிரூட்டியை அணைக்கவும்.
- மறுசுழற்சி செய்ய முற்படுங்கள். நெகிழி மற்றும் அலுமினியம் பொருட்களை மறுபயனீடு செய்ய சிறந்த இடத்தைத் தேடுங்கள். ஒரு சில பேரங்காடிகளில் பெரிய கொள்கலன்கள் உள்ளன, அங்கு நீங்கள் பயன்படுத்திய மின்கலன்களைப் (பேட்டரிகள்) பாதுகாப்பாக அப்புறப்படுத்தலாம்.